சாது சிதம்பர சுவாமிகளின் வழிபாட்டில் பெண்களின் பங்கு

சொ.தங்கத்துரை
சூமுழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
பதிவு எண்-23211074021002
வெ.ப.சு.தமிழியல் ஆய்வு மையம்
ம.தி.தா.இந்துக்கல்லூரி,திருநெல்வேலி
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், அபிஷேகப்பட்டி
திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா

முனைவர் இரா.இலக்குவன்
நெறியாளர்-உதவிப்பேராசிரியர்
வெ.ப.சு.தமிழியல் ஆய்வு மையம்
ம.தி.தா.இந்துக்கல்லூரி,திருநெல்வேலி
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், அபிஷேகப்பட்டி
திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா

ஆய்வுச்சுருக்கம்

தமிழ் சமய மரபில் பெண்களின் ஆன்மீக இடம் பல்வேறு காலகட்டங்களில் மாறுபட்டு வந்தாலும், 19ஆம் நூற்றாண்டில் வள்ளலார் முன்னிறுத்திய சமரச சுத்த சன்மார்க்கம் புதிய சமத்துவ நோக்கைக் கொண்டு வந்தது. அந்த வகையில் சாது சிதம்பர சுவாமிகள் வள்ளலாரின் சீடராக இருந்து தங்களுடைய வழிபாட்டில் வள்ளலாரின் நெறியை அப்படியே புகட்டினார். குறிப்பாகப் பெண்கள், வழிபாட்டில் பாதுகாப்பு, தன்னம்பிக்கை, மகிழ்ச்சி இவற்றை உணர்ந்தார்கள். ஆகவே சுவாமிகள் உருவாக்கிய பெண்களுக்கான வழிபாட்டு முறைகளை இக்கட்டுரை ஆராய்கிறது.

திறவுச்சொற்கள்: வள்ளலார், பெண்கள், வழிபாடு, அமாவாசை, ஜோதி, கோ புஜை, கஜபுஜை, குருபுஜை.

முன்னுரை

வாழையடி வாழை என வந்த திருக்கூட்ட மரபினில் ஒருவராகத் தேன்றியவர் வள்ளலார் ஆவார். இவர் பெண்களை ''அம்மையின் உருவம்'' எனப் போற்றி, சன்மார்க்க வழிபாட்டில் ஆணுக்கு நிகரான சம உரிமை வழங்கினார். ''ஆணுக்குள் பெண், பெண்ணுக்குள் ஆண்'' என்ற சமத்துவக் கொள்கையைப் பின்பற்றி வந்தார். அத்தன்மையில் வள்ளலாரின் கொள்கையைப் பின்பற்றி வந்த சாது சிதம்பர சுவாமிகளும் ''அம்மை அப்பாத்துணை'' என்ற வாசகத்தை அன்றாட வாழ்க்கையில் உச்சரித்து வந்தார். ஆகையால் சுவாமிகள் தங்களுடைய வழிபாட்டில் ஆண், பெண் பேதமின்றி பெண்கள் முன்னின்று செயல்படவும் வழிவகுத்துள்ளார் என்பதை இக்கட்டுரை ஆய்வு செய்கிறது.

சாது சிதம்பர சுவாமிகள்

தூத்துக்குடி மாவட்டம், திருநெல்வேலி - தூத்துக்குடி நெடுஞ்சாலையில், திருநெல்வேலியிலிருந்து 18 கி.மீ தொலைவில் உள்ள ஊர் வல்லநாடு. வல்லநாட்டில் இருந்து 1 கி.மீ. தூரத்தில் பாறைக்காடு என்ற ஊர் அமைந்துள்ளது. சண்முக சாது என்ற நாட்டு மருத்துவருக்கும், உலகம்மையாருக்கும் மகனாய் பிறந்தவர் சாது சிதம்பர சுவாமிகள் ஆவார். இவர் 1922 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் இருபதாம்

நாள் தீபாவளி அன்று பிறந்த சிதம்பரம் இரண்டாம் வகுப்பு வரையே பள்ளிப்படிப்பு படித்துள்ளார். இவர் வள்ளலாரின் கொள்கையைப் பின்பற்றி வந்தார்.

வழிபாடு - பொருள் விளக்கம்

வழிபடு என்ற வேர்ச் சொல்லிருந்தே வழிபாடு என்ற சொல் பிறந்திருக்கலாம். இச்சொல் ஆழ்ந்த பொருளை உள்ளடக்கியது. வழிபடுதல் என்பது இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையே ஒரு மனநெருக்கத்தை ஏற்படுத்துகிறது. இறைவனுக்குச் செய்யப்படும் வணக்க முறைகளைப் பொதுவாக வழிபாடு என்ற சொல்லாலே குறிப்பிடப்படுகின்றன. "வழிபாடு என்பதற்குக் கோட்பாடு, செல்லுதல், பின்பற்றுதல், நெறிப்படுத்துதல், வணங்குதல் என்று அகராதிகள் பொருள் தருகின்றன." (2017:825) "முன்னோர் காட்டிய அல்லது வகுத்த வழியில் செல்லுதலே வழிபாடு" (1994:207) என மு.அ. மாணிக்கவேலு கூறும் கருத்து வழிபாட்டுக்கான பொருள் விளக்கத்தை வலுப்படுத்துவதாக அமைகிறது.

ஆகையால், வழிபாடு என்பது தெய்வங்களை மகிழ்விப்பதற்காக மேற்கொள்ளப்படும் செயல்பாடுகளும் புசனை முறைகளும் வழிபாடு என்றும், இறைவனுடன் இரண்டறக் கலப்பதே வழிபாடு என்றும், வழிபாடு குறித்துப் பல்வேறு விளக்கங்கள் முன் வைக்கப்படுகின்றன. மேற்கொண்ட கருத்துக்களின் வழி உயர் நிலையான ஒன்றை உள்ளத்தால் நெருங்கவும் உணர முற்படவும் மேற்கொள்ளப்படும் வழிமுறைகளே வழிபாடு எனப்படுகிறது.

சாது சிதம்பர சுவாமிகளின் வழிபாடு
நவக்கிரக ஜோதி வழிபாடு

சுவாமிகள் கோயில்களிலும், ஆற்றங்கரைகளிலும், மலை அடிவாரங்களிலும் நவக்கிரகத்தை நிறுவியுள்ளார். சுவாமிகள் முதலில் நவக்கிரகங்களை நிறுவிய பின்னரே ஏழு இடங்களில் அமாவாசை ஜோதி ஸ்தம்பங்களை நிறுவியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

நவக்கிரகங்களை தூத்துக்குடி மாவட்டம் வல்ல நாட்டில் உள்ள திருமூலநாதர் கோயில் சன்னதியிலும், நெல்லை மாவட்டம் முக்கூடலில் உள்ள முத்துமாலை அம்மன் கோயில் சன்னதியிலும், ஈரோட்டுக்கருகில் அகண்ட காவிரியில் உள்ள கணபதி பாளையத்திலும், கோயம்புத்தூர் வெள்ளியங்கிரி மலை அடிவாரத்திலும், திண்டுக்கல் மாவட்டம் சின்ன ஐவர் மலையிலும், கணியூர் ஜோதி கோயிலிலும் நிறுவியுள்ளார். இவற்றுள் ஒரு சில இடங்களான திருமூலநாதர் கோயில், முத்துமாலை அம்மன் கோயில், அகண்ட காவிரி, வெள்ளயங்கிரி போன்ற இடங்களில் வருடந்தோறும் நவக்கிரக ஜோதி வழிபாடு நடைபெறுகிறது.

அமாவாசை ஜோதி வழிபாடு

முதல் ஜோதி ஸ்தம்பம் மூலைக்கரைப்பட்டி - அருள் அன்பு மலை (ஆடி, தை), இரண்டாவது ஜோதி ஸ்தம்பம் செங்கோட்டை - அருள் ஆனந்த மலை (ஆவணி, மாசி), மூன்றாவது ஜோதி ஸ்தம்பம் புளியங்குடி - அருள் இன்ப மலை (புரட்டாசி, பங்குனி), நான்காவது ஜோதி ஸ்தம்பம் குப்பக்குறிச்சி - அருள் ஈன்ற மலை (சித்திரை, ஐப்பசி) ஐந்தாவது ஜோதி ஸ்தம்பம் ஐவர் மலை - அருள் உண்மை மலை (வைகாசி, கார்த்திகை), ஆறாவது ஜோதி ஸ்தம்பம் காடுவெட்டி - அருள் ஊற்று மலை (ஆனி, மார்கழி) போன்ற ஒவ்வொரு ஜோதி ஸ்தம்பத்திற்கும் 'சுஅருள்சுசு என்ற அடைமொழியைச் சேர்த்து பெயரிட்டுள்ளார். ஒவ்வொரு மாதங்களில் வரக்கூடிய அமாவாசை நாளன்று ஜோதி வழிபாடு நடைபெறுகிறது.

ஏழாவது மலையாக குன்னத்தூர் - அருள் எல்லை மலை ஒரே மாதத்தில் இரண்டு அமாவாசைகள் வந்தால், இம்மலையில் ஜோதி ஏற்றி வழிபாடு நடைபெறும். தற்போது

இங்கு பௌர்ணமி ஜோதி வழிபாடும், கிரிவலமும் நடைபெறுகிறது.

108, 1008 நவக்கிரக ஜோதி வழிபாடு

சுவாமிகள் தமிழ்நாட்டில் பல இடங்களுக்குச் சென்று 108, 1008 நவக்கிரக ஜோதி ஏற்றி வழிபாடு செய்வதை வழக்கமாக வைத்திருந்தார். இவர் திருமணம், புப்பெய்திய சடங்குகள், திருமணம் நடைபெறாமல் இருக்கும் பெண்கள், ஆண்கள் வீடுகளிலும், கடைதிறப்பு, புதுமனை புகுவிழா போன்ற நிகழ்வுகளிலும, நோய் நொடிகளில் சிக்கித் தவிப்பவர்கள், குழந்தைப் பேறு இல்லாதவர்கள் வீடுகளிலும் 108, 1008 நவக்கிரக தீபம் ஏற்றி வந்துள்ளார்.

மாதம், வருட வழிபாடு:

அருள் ஆனந்த செந்தில் பெருமான் ஆலயத்தில் மாதந்தோறும் நடைபெறும் புச நட்சத்திர வழிபாடு, வருடந்தோறும் நடைபெறும் குரு புஜை நடைபெறுகிறது.

மேலும் சாது சிதம்பர சுவாமிகளின் நவக்கிரக வழிபாடு, அமாவாசை ஜோதி வழிபாடு, 108, 1008 ஜோதி வழிபாடு, புச நட்சத்திர வழிபாடு குருபுஜை முதலிய வழிபாடுகளில் பெண்களும் கலந்து கொள்கின்றனர்.

சுவாமிகளின் வழிபாட்டில் பெண்களின் பங்கு

அகவல் பாராயணம்

இராமலிங்கப் பெருமானார் அருளிச் செய்ததிருவருட்பாவில் ஆறாம்திருமுறையில் அமைந்துள்ள ''அருட்பெருஞ் ஜோதி அகவல்'' என்ற பதிகம், மக்களைக் கவர்ந்து இழுக்கும் வகையில் தனித்தன்மை வாய்ந்ததாக அமைந்துள்ளது. உலகெங்கிலுமுள்ள தமிழர்கள் இப்பதிகத்தை பயபக்தியோடு பாராயணம் செய்து வருகின்றனர். அந்த வகையில் சாது சிதம்பர சுவாமிகளின் வழிபாடுகளில் தொடக்க நிகழ்வாக அகவல் பாராயணம் நடைபெறுவது வழக்கமாகும். அகவல் பாராயணத்தில் விநாயகர் பாடல், திருப்பள்ளியெழுச்சி, திருவடிப்புகழ்ச்சி, சிவபுராணம் போன்ற பாடல்கள் பாராயணம் செய்யப்படுகிறது. அகவல் பாராணயத்தில் பெண்களும் கலந்து கொண்டு பாராயணம் செய்கின்றனர்.

கோ புஜை, கஜபுஜை வழிபாட்டில் பெண்களின் பங்கு

சுவாமிகளின் 108 ஜோதி வழிபாடு, 1008 ஜோதி வழிபாடு, நவக்கிரக ஜோதி வழிபாடு, அமாவாசை ஜோதி வழிபாடு, புச நட்சத்திர வழிபாடு போன்ற வழிபாடுகளில் கோ புஜை, கஜபுஜை நடைபெறுகிறது. பசு மற்றும் யானைக்குத் தேவையான உணவு பொருட்கள், பு மாலைகள், எலுமிச்சை பழ மாலைகள், அருகம்புல் மாலைகள், வஸ்திரம், சந்தனம், குங்குமம் போன்றவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு தட்டிலில் தனித்தனியாக வைக்கப்பட்டிருக்கும். அந்தத் தட்டுகளைக் பெண்கள் ஒவ்வொன்றாக எடுத்துக்கொண்டு பசு மற்றும் யானையை வலம் வருகின்றனர்.

சிதம்பர சக்கரம் வரைவதில் பெண்களின் பங்கு:

108, 1008 மற்றும் நவக்கிரக ஜோதி ஏற்றுவதற்கு முதலில் சிதம்பர சக்கரம் வரையப்படுகிறது. சிதம்பர சக்கரமானது ஐம்புதங்களைக் குறிக்கும் வகையில் ஐந்து விநாயகர் வீடுகள், ஒன்பது நவக்கிர வீடுகள், பன்னிரண்டு இராசி வீடுகள், இருபத்து ஏழு நாட்சத்திரங்கள் கொண்டதாக சிதம்பர சக்கரம் திகழ்கிறது.

சிதம்பர சக்கரம் வடிக்கும் போது விநாயகர் வீடுகள், நவக்கிரக வீடுகள், இராசி வீடுகள், போன்ற வீடுகளுக்குடைய கட்டங்கள் முதலில் சுண்ணாம்புக் கட்டியால் வரையப்படுகிறது. அதன்மேல் பெண்கள் மஞ்சள் பொடி மற்றும் மாபொடியினால் சிதம்பர சக்கரத்தை வரைகின்றனர். ''மஞ்சள் பொடி, பச்சரிசிப் பொடியில் கோலம் இடுவது வள்ளலாரின் வெள்ளை, மஞ்சள் நிறத்தால் ஆன சன்மார்க்கக் கொடியின்

அடையாளம் ஆகும்." சு.அரங்கவிநாயகி வள்ளலாரும் வல்லநாட்டாரும் என்ற நூலில் பதிவு செய்துள்ளார். (2002:47)

சிதம்பர சக்கரத்தினுள் ஒன்பது நவக்கிரக வீடுகள் அவற்றிற்குரிய சின்னங்களோடு வரையப்படுகிறது. அந்தந்த சின்னங்களுக்கு அந்தந்த நவக்கிரகங்களுக்குரிய வண்ணப் பொடியினால் பெண்கள் கோலம் இடுகின்றனர். "தரையில் இடப்படும் கோலம், வீட்டின் தலைவாயிலிலும், வீட்டிற்குள் தெய்வ வழிபாடு நிகழ்த்தப்படும் இடத்திலும், கோயில்களிலும் இடப்படுகின்றது. எனவே கோலம் என்பது அழகுணர்ச்சி சார்ந்த வரைகலை வெளிப்பாடாக மட்டுமின்றி புனிதத் தன்மை அல்லது சடங்கியல் தன்மையுடையதாகவும் விளங்குகின்றது என்பதை உணரலாம்." (2022:102)

108, 1008 மற்றும் நவக்கிரக ஜோதி வழிபாட்டில் பெண்களின் பங்கு

108, 1008 மற்றும் நவக்கிரக ஜோதி ஏற்றுவதற்கு பயன்படும் 1,5, 6, 7, 10, 11 என்று செம்பினாலான மூக்குத்திரி கொண்ட விளக்குத் தட்டுகளை பெண்கள் சுத்தம் செய்கின்றனர்.

108, 1008மற்றும்நவக்கிரகஜோதிமுதலில் பெண் குழந்தையின் மூலம் ஏற்றப்படுகிறது. ஐந்து, ஆறு பத்திகளை ஒரு கட்டாகக் கட்டிக் கொண்டு அதனை மக்களிடம் வணங்கிய பின்பு அகவல் பாராயணத்தோடு வழிபாட்டில் கலந்து கொள்ளும் பெண் குழந்தையின் மூலம் முதலில் சந்திரன் வீட்டில் ஜோதி ஏற்றப்படுகிறது. பின்பு தான் ஆண்கள் ஜோதி ஏற்றுகின்றன.

குருபுஜை வழிபாட்டில் பெண்களின் பங்கு

சுவாமிகளின் தாய், தந்தை குருபுஜை மற்றும் சுவாமி, சுவாமியின் மனைவி குருபுஜைகளில் மதிய புஜையில் சட்டி சாதம் படைக்கப்படுகிறது. ஒரு மண் உலைமூடியில் சுத்த சாதம், ஒரு மண் கலயத்திற்குள் சர்க்கரைப்பொங்கல், உளுந்த வடை, வாழைப்பழம் முதலியவை இடம்பெறுகிறது. தொண்டர் குல மக்கள் இதனையே சட்டி சாதம் என்கின்றன. (தொண்டர் குலம் என்பது சுவாமியின் வழியைப் பின்பற்றுவோர்) குருபுஜை நாளன்று மொத்தம் 19 சட்டிசாதம் படைக்கப்படுகிறது. இதனைப் பெண்கள் ஒவ்வொன்றாக எடுத்து வந்து சமாதியின் முன் வைக்கின்றனர்.

அமாவாசை வழிபாட்டில் பெண்களின் பங்கு

அமாவாசை வழிபாடு என்பது சுவாமிகளால் நிறுவப்பட்டுள்ள அமாவாசை மலைகளில் மாதந்தோறும், மாலை நேரத்தில் ஜோதி ஏற்றி வழிபாடு செய்து வருவது மரபாகத் திகழ்கிறது. அந்த வழிபாட்டில் பெண்களும் கலந்து கொண்டு படையலுக்குத் தேவையான கேப்பைக்கூழ், சர்க்கரைப் பொங்கல் போன்வற்றை தயார் செய்கின்றனர்.

விளக்கேற்றுதல்

திருக்கோயில்களில் பெண்கள் விளக்கேற்றுவது தமிழர்களின் பண்பாட்டு மரபுகளுள் ஒன்றாகத் திகழ்கின்றது. அத்தன்மையில் அருள் ஆனந்த செந்தில் விநாயகப் பெருமான் ஆலயத்தில் தஞ்சாவூர், கும்பகோணம், கோயம்புத்தூர், பொள்ளாச்சி, மதுரை போன்ற ஊர்களில் இருந்து வருகின்ற பெண்கள் குருபுஜை நாளன்று விளக்கேற்றுகின்றனர். திருநெல்வேலி இருந்து வரக்கூடிய பெண்கள் புசநட்சத்திர நாளன்று விளக்கேற்றுகின்றனர்.

முடிவுரை

சாது சிதம்பர சுவாமிகள் வள்ளலாரைப் போலவே பெண்களுக்கு வழிபாட்டில் உரிமைகள் கொடுத்துள்ளார். திருமணம் நடைபெறாமலிருக்கும் இளவயது பெண்களும் தெய்வத்திற்கான வழிபாடுகளை மேற்கொள்ளலாம் என்கிறார். குறிப்பாக பெண்களை மாதவிடாய் தீட்டு என்று ஒதுக்கிய காலத்தில் சாது சிதம்பர சுவாமிகள் வள்ளலார் போலவே

பெண்கள் உடலால் தூய்மையானவர்கள் என்று வழிபாட்டில் ஈடுபட வைத்துள்ளார். பெண்கள் நவக்கிரக ஜோதி வழிபாடு, 108 ஜோதி வழிபாடு, 1008 ஜோதி வழிபாடு, புச நட்சத்திர வழிபாடு, அமாவாசை வழிபாடு, குருபுஜை வழிபாடு போன்ற வழிபாடுகளில் கலந்து கொண்டு திருஅருட்பா பாடல்கள் பாடுவது, பு மாலைகள் கட்டித் தருவது, அன்னம் பாலிப்பது, விளக்குத் தட்டுக்களைச் சுத்தம் செய்தல், கோ புஜை மற்றும் கஜ புஜைகளில் கலந்து கொண்டு பல்வேறு பணிகளைச் செய்து வந்துள்ளார்கள் என்பதை இக்கட்டுரையின் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

துணை நின்ற நூல்கள்

1. *அரங்கவிநாயகி.சு வள்ளலாரும் வல்லநாட்டாரும், கோவை: ருக்மணி ஆப்செட் பிரஸ், 2002*
2. *கழகத்தமிழ்ப் புலவர் குழுவினர், கழகத் தமிழ் அகராதி, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், சென்னை, 2007.*
3. *சங்கரபாண்டியன் வெ, வல்லநாட்டுச்சித்தர் சாது சிதம்பரசுவாமிகள் வரலாறு, சென்னை: மேடைமணி பதிப்பகம், 2010.*
4. *பரமசிவன்.தொ., பரண், சென்னை: ரிதம் வெளியீடு, 2022.*
5. *மாணிக்கவேலு.மு.அ.., தமிழ்நாட்டில் நடராசர் வழிபாடு, சென்னை: அம்பலவாணர் பதிப்பகம், 1994.*
6. *முத்தாலங்குறிச்சி காமராசு, வரங்களை அள்ளித்தரும் வல்லநாட்டுச் சித்தர், மதுரை: தாமரை பிரதர்ஸ் மீடியா பிரைவேட் லிமிடெட் 2021.*